ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2258/12 - 2021 දෙසැම්බර් මස 14 වැනි අඟහරුවාදා - 2021.12.14
*2258/12 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, வறக்காபொலை பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டத்தின் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை எடுத்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

**வாசுதேவ நாணாயக்கார,**
நீர் வழங்கல் அமைச்சர்.

தொடர்பு இல. DVP/02/04/KE/324.
நீர் வழங்கல் அமைச்சு,
''லக்திய மெதுர'',
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2021, திசெம்பர் 10.


இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

கேகாலை மாவட்டத்தில், வறகாபொலை பிரதேச செயலகப் பிரிவில், இல. 82/A, துல்ஹிரிய கிராம அலுவலர் பிரிவில், மொன்ரொவியாவத்த கிராமத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திட்டப்படத்தின் துண்டு இல. 1 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள மொன்ரொவியாவத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து சுமார் 0.25106 ஹெக்டயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப் பகுதியின் விபரங்கள் :

வடக்கு : தேட்ட வீதி;
கிழக்கு : தேட்ட வீதி;
தெற்கு : மொன்ரொவியாவத்த எல்லை;
மேற்கு : மொன்ரொவியாவத்த எல்லை.

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :

கேகலு பெருந்தோட்ட நிறுவனம்,
இல. 310,
ஹைலெவல் வீதி,
த. பெ. இல. : 16, நாவின்ன,
மஹரகம.

EOG 12 - 0132

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, லன்தேகம நீர் சேகரிப்புத் தாங்கியை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை எடுத்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக் காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

**வாசுதேவ நாணாயக்கார,**
நீர் வழங்கல் அமைச்சர்.

தொடர்பு இல. DVP/02/03/BD/320.
நீர் வழங்கல் அமைச்சு,
''லக்திய மெதுர'',
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2021, திசெம்பர் 06.

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தில், வெலிமடை பிரதேச செயலகப் பிரிவில், இல. 52 B, லன்தேகம கிராம அலுவலர் பிரிவில், ஊவ பென்ஹெட் பகுதி, வெலிமட வத்த கிராமத்தில் அமைந்துள்ள, ஊவ பென்ஹெட் பகுதி, வெலிமட வத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து சுமார் 20 பேர்ச்சுகள் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதியின் விபரங்கள் :

வடக்கு : லன்தேகம பாடசாலை;
கிழக்கு : கொங்றீட் பாதை;
தெற்கு : ஊவ பென்ஹெட் பகுதி, பிரிவு இல. 3;
மேற்கு : ஊவ பென்ஹெட் பகுதி, பிரிவு இல. 3.

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :

மல்வத்த வெலி பெருந்தோட்ட நிறுவனம்,
ஊவ பென்ஹெட் பகுதி,
வெலிமடை வத்த.

EOG 12 - 0133

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு ஓபநாயக நீர் வழங்கல் செயற்திட்டத்தின் நீர் உள்வாங்கு கிணற்றினை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை எடுத்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக் காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல. DVP/*02*/*04*/RN/*281*.
*நீர் வழங்கல் அமைச்சு,*
*''லக்திய மெதுர'',*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2021, திசெம்பர் 03.*

**அட்டவணை**

*இரத்தினபுரி மாவட்டத்தில், ஓபநாயக பிரதேச செயலகப் பிரிவில், இல. 243/ஏ, தன்தெனிய கிராம அலுவலர் பிரிவில், ஹுனுவல தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள, மாநிபுர மஹ அரப என்றழைக்கப்படுகின்ற காணியிலிருந்து சுமார் 20 பேர்ச்சுகள் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதியின் விபரங்கள் :*

| | | |
|---|---|---|
| *வடக்கு* | : | *இக்காணியின் எஞ்சியுள்ள காணிப்பகுதி;* |
| *கிழக்கு* | : | *வீதி;* |
| *தெற்கு* | : | *கால்வாய்;* |
| *மேற்கு* | : | *வே கங்கை.* |

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* *01.* *டபிள்யு. எம். சரசி மிபோதா மாநிபுர,*
*மாநிபுர வலவ்வை,*
*ஓபநாயக.*

EOG *12 - 0134*